பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு : ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

34 ] சென்னை—ஞாயிறு, டிசம்பர் 1, 1946. [ விலை. அணா. 2

## முதற் பாடம்

காந்தியடிகள் திவான்பாரி என்னுமிடத்தில் நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் நோவாகாளி ஜில்லா மாஜிஸ்திரேட் திரு. மெக்கார்னி கீழ்க்கண்டவாறு பேசினார் :—

"பூகம்பம், பெரு வெள்ளம், தொத்து நோய் போன்ற கேடுகள் உண்டானால் ஏராளமான ஜனங்கள் பாதிக்கப்படுகிறார்கள். அது போலவே கலகங்களிலும் ஏராளமான ஜனங்கள் பாதிக்கப்படுகிறார்கள். பூகம்பம் முதலிய கேடுகள் ஏற்பட்ட பிறகு முதன் முதலாக ஜனங்களுக்குச் செய்ய வேண்டிய உதவி உணவும், உடையும், தங்குவதற்கு இடமும், வைத்திய வசதியுமாகும். அந்த வசதிகளையே தான் கலகங்கள் ஏற்பட்ட பிறகும் முதன் முதலாகச் செய்ய வேண்டியதாகும். ஆனால் அவைகளைவிட அதிக முக்கியமான தேவை யாதெனில் சகல அறங்களுக்கும் அஸ்திவாரமாகவுள்ள மனோதைரியமேயாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் நோவாகாளிக்கு காந்தியடிகள் விஜயம் செய்திருப்பது மிகுந்த பொருத்தமான காரியமாகும். ஏனெனில் மனோதைரியத்தை அரிசி மாதிரி விநியோகம் செய்ய முடியாது. அதை ஹிருதயத்திலிருந்து தான் எழுப்பிவிட வேண்டும். காந்தியடிகளைவிட யார் அந்தக் காரியத்தை அதிகத் திறமையாகச் செய்ய முடியும்?"

### ஒரே வழி

அந்த மாதிரி அவர் சொல்லும் பொழுது, காந்தியடிகள் திப்பரா ஜில்லாவில் கால் எடுத்து வைப்பதற்கு முன்னதாகவே அந்த விஷயத்தைக் குறித்து பேசி இருக்கிறார் என்பது அவருக்குத் தெரியாது. சந்தபூர் என்னும் ஊரில் காலஞ்சென்ற ஹர்தயால்நாக் என்பவருடைய மகன் உள்பட இருபத்தைந்து ஊழியர்களும், பல சகாய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் நவம்பர் 7-ம் தேதி காலையில் "கிவி" என்னும் கப்பலில் காந்தியடிகளைச் சந்தித்துப் பேசினார்கள். அப்பொழுதே காந்தியடிகள் மனோதைரியமென்னும் முதல் பாடத்தை கற்றுக் கொடுக்கலானார். அவர் கூறியதாவது :—

"மதமாற்றம் செய்யப்பட இடங் கொடுப்பதையும் கற்பு அழிக்கப்பட இடங் கொடுப்பதையும் என்னால் சகிக்க முடியவில்லை. இத்தகைய இழிவான காரியங்களுக்கு உட்பட நாம் சம்மதிக்கும்வரை இத்தகைய இழிவான காரியங்கள் நடந்துகொண்டே தானிருக்கும். போலீஸ் உதவியும் இராணுவ உதவியும் இல்லாமல் நாம் எதுவும் செய்ய முடியாது என்று சொல்வோமானால் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தோல்வி அடைந்து விட்டோம் என்று ஒப்புக் கொள்கிறவர்கள் ஆவோம். கோழைகளாக இருக்கும் ஜனங்களை உலகத்திலுள்ள எந்தப் போலீஸாரும் இராணுவமும் காப்பாற்றிவிட முடியாது. ஆயிரக் கணக்கான மக்கள் ஒரு சிலரை துன்புறுத்தப் புறப்பட்டால் அந்தச் சிலர் என்ன செய்ய முடியுமென்று நீங்கள் இன்று சொல்கிறீர்கள். ஆனால் ஜனங்கள் கோழைகளாயிருந்தால் அவர்களை பயமுறுத்த இரண்டொருவர் கூட போதும். உங்களுக்குள்ள குறை நீங்கள் குறைந்த தொகையினர் என்பதன்று. நம்மால் என்ன முடியும் என்ற எண்ணம் உங்களை ஆட்கொண்டிருப்பதும் அதனால் நீங்கள் பிறர் உதவியை எதிர் பார்த்து நிற்கும் வழக்கம் ஏற்பட்டிருப்பதுமே யாகும். இதற்குப் பரிகாரம் உங்களிடமே இருந்து கொண்டிருக்கிறது. மொத்தமாக கிழக்கு வங்காளத்திலிருந்து வேறு இடங்களுக்கு குடியேற வேண்டும் என்று சொல்லப்படுவதை நான் எதிர்ப்பதற்கு இது ஒரு காரணமாகும். அது கோழைத் தனத்தைப் போக்குவதற்குரிய வழியாகாது."

இவ்வாறு காந்தியடிகள் கூறியதும் வந்திருந்தவர்கள் "கிழக்கு வங்காளத்திலுள்ளவர்களும் அந்த யோசனையை எதிர்க்கவே செய்கிறார்கள்" என்று கூறினார்கள்.

அதன்மேல் காந்தியடிகள் கூறியதாவது :—

"அவர்கள் கிழக்கு வங்காளத்தை விட்டு வெளியேறலாகாது. தேக பலமுள்ள 20 ஆயிரம் பேர் அஹிம்ஸா முறையில் தைரியமாக உயிர்விடத் தயாராயிருக்க வேண்டுமென்று நான் சொன்னால் அதை நீங்கள் அசாத்தியமான காரிய மென்று எண்ணுவீர்கள். ஆனால் 20 ஆயிரம் பேர் போர்க் களத்தில் உயிர் விட முடியும் என்பதை நீங்கள் நம்புவீர்கள். கிரீஸ் தேசத்தில் தர்மாபலி என்னு மிடத்தில் லியோனடாஸ் என்னும் சேனாதிபதியின் ஐநூறு போர் வீரர்கள் ஆயிரக் கணக்கான பகைவர்களை எதிர்த்து நின்று உயிர் துறந்து அமரத்துவம் அடைந்ததுபோல அவர்களும் அடைவார்கள். தர்மாபலியில் இறந்த வீரர்களின் கல்லறையின் மீது கீழ்க்கண்ட வரிகள் கம்பீரமாக பொறிக்கப் பட்டிருக்கின்றன.

> 'இந்தக் கல்லறையைப் பார்ப்பவரே! எங்கள் தேசத் தாயாகிய ஸ்பார்டாவிடம் அவளுடைய குமாரர்கள் உயிர் துறக்க வேண்டுமென்று அவள் ஆணை இட்டபடியே உயிர் துறந்தார்கள் என்று கூறும்'.

### தவறான வேண்டுகோள்

இந்த ஒரே நிபந்தனையின் பேரில்தான் நீங்கள் கிழக்கு வங்காளத்தில் வாழ முடியும் என்று கோபுரத்தின் மீது நின்று கொண்டு உலகமறியக் கூறிவேன். நீங்கள் முஸ்லிம் உத்தியோகஸ்தர்களையும் முஸ்லிம் போலீசையும் முஸ்லிம் இராணுவத்தையும் மாற்றிவிட்டு ஹிந்து உத்தியோகஸ்தர்களையும், ஹிந்து போலீஸையும் ஹிந்து ராணுவத்தையும் அனுப்புமாறு கேட்கிறீர்கள். ஹிந்து போலீஸாரும் ஹிந்து ராணுவமும் கொள்ளையடித்தல் தீவைத்தல் கடத்திச் செல்லுதல் கற்பை அழித்தல் போன்ற காரியங்களை எல்லாம் சென்ற காலத்தில் செய்திருக்

கிறார்கள் என்பதை நீங்கள் மறந்து விடுகிறீர்கள். நான் சிறு சிறு சமஸ்தானங்கள் உள்ள கத்தியவாட் பிரதேசத்தைச் சேர்ந்தவன். மனிதனுடைய சுபாவம் எவ்வளவு கேவலமாக ஆகக்கூடுமென்பதை நான் உங்களுக்கு வர்ணிக்க முடியாது. அங்குள்ள சில சமஸ்தானங்களில் எந்தப் பெண்ணும் தன்னுடைய கற்பைக் குறித்து தைரியமாயிருக்க முடியாது. அங்குள்ள அரசர்கள் போக்கிரிகள் என்று சமாதானம் சொல்ல முடியாது. அவர்கள் சட்டரீதியாக நியமிக்கப்பட்ட தலைவர்கள் ஆவார்கள்."

இதற்கு வந்திருந்தவர்கள் "ஆனால் அங்கே அநியாயம் செய்வது தனிப்பட்ட நபர்கள். இங்கோ ஒரு ஜாதியார் முழுவதுமே அக்கிரமங்கள் செய்ய இறங்கி இருக்கிறார்கள்" என்று சொன்னார்கள்.

காந்தியடிகள் :—

"ஆனால் அங்கும் தனி நபர் தனியாக இருக்கவில்லை. அவருடைய சிறிய சமஸ்தானத்தின் ஆயுத பலமும் அதிகார பலமும் அவருக்குப் பின்பலமாக இருந்து கொண்டிருக்கின்றன."

வந்தவர்கள் :—

"ஆயினும் அப்படி அக்கிரமம் செய்யும் அரசர்களை மற்ற அரசர்கள் கண்டிக்கிறார்கள். ஆனால் இங்கே நடக்கும் அக்கிரமங்களை முஸ்லிம்கள் கண்டிக்கவில்லை."

காந்தியடிகள் :—

"நான் இங்கே வந்தது முதல் வங்காளப் பிரதம மந்திரி சுகர்வர்த்தி முதல் பல முஸ்லிம்கள் இந்த அட்டூழியங்களைக் கண்டிப்பதைத் தவிர வேறெதுவும் என் காதில் விழவில்லை. கண்டன மொழிகள் உங்கள் காதுக்கு இனிமையாகத் தோன்றலாம். ஆனால் வீடுகளை இழந்தும் வேறு இடங்களுக்குக் கடத்தப்பட்டும் பலாத்காரமாக மதமாற்றம் செய்யப்பட்டும் பலாத்காரமாக கலியாணம் செய்யப்பட்டும் வருந்துகின்ற துரதிருஷ்டம் வாய்ந்த பெண்களுக்கு இந்தக் கண்டன மொழிகள் எந்த விதத்திலும் ஆறுதலளிக்க முடியாது. ஹிந்துக்களுக்கு எவ்வளவு வெட்கரமான காரியம்! இஸ்லாம் மதத்திற்கு எவ்வளவு இழிவான காரியம்! உங்களை நான் சும்மாயிருக்கும்படி விடப் போவதில்லை. இந்த மனிதர் எப்பொழுது இங்கிருந்து போவார் என்று வெகு சீக்கிரத்தில் நீங்கள் சொல்லப் போகிறீர்கள். ஆனால் இந்த மனிதர் இந்த இடத்தை விட்டுப் போகப் போவதில்லை. உங்கள் அழைப்பின் பேரில் அவர் இங்கு வரவில்லை. அவர் கிழக்கு வங்காளத்திற்கு வந்த காரியம் முடிவடைந்து நீங்கள் ஆசீர்வதித்து அனுப்பும்போது தான் போவார்."

அப்பொழுது பேட்டிகாண வந்தவர்களில் ஒருவர் :— "இந்த மாதிரி நடப்பது அவர்கள் பாகிஸ்தான் அடைவதற்காகப் போட்டுள்ள திட்டத்தில் ஒரு பகுதியே யாகும்."

காந்தியடிகள் :—

"அது பரிபூர்ணமான பைத்தியக்கார யோசனையாகும். அதை அவர்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள். வெகு சீக்கிரத்தில் அவர்களுக்கு அதனிடத்தில் அருவருப்பு உண்டாய்விடும். இப்பொழுதே அது உண்டாக ஆரம்பித்திருக்கிறது."

வந்திருந்தவர் :—

அப்படியானால் அவர்கள் ஏன் இங்கு வந்து இதைச் சரிப்படுத்த வில்லை?

காந்தியடிகள் :—

அந்த நிலைமை நோயினது நெருக்கடியைக் காட்டும். நோய் தீர்ந்து பலம் ஊறிய பிறகே பரிபூர்ண ஆரோக்யம் ஏற்படும். நான் ஒரு இயற்கை வைத்தியன் என்பது உங்களுக்குத் தெரியுமே," என்று கூறிச் சிரித்தார். அதில் எல்லோரும் கலந்து கொண்டார்கள்.

அதன்பின் மற்றொரு நண்பர் "ஆனால் நாங்கள் கடலிலுள்ள ஒரு துளி போல் தனே இருக்கிறோம்" என்று கூறினார்.

அதற்குக் காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

"கிழக்கு வங்காளத்தில் ஒரே ஒரு ஹிந்து இருந்தால் கூட அவர் முஸல்மான்களிடையே போய் வாழக் கூடிய மனோதைரியம் உடையவராயிருக்க வேண்டுமென்றும் அவசிய மேற்பட்டால் வீரரைப்போல் உயிர் துறக்கச் சித்தமாயிருக்க வேண்டுமென்றும் விரும்புகின்றேன். அவர் அடிமையாக வாழ மறுத்துவிட வேண்டும். போர் செய்யாமல் இறப்பதற்கு வேண்டிய அஹிம்ஸா பலம் அவரிடத்தில் இல்லாமலிருக்கலாம். ஆனால் அவர் அக்கிரமங்களுக்கு அடி பணியாமல் மனிதனைப் போல் போர் செய்து இறக்க மனோதைரியமுடையவராக இருந்தால் எல்லோரும் அவரைப் போற்றவே செய்வார்கள். கடின சிந்தையும் குரூரத்தன்மையும் உடையவர்கள்கூட வீரனைக் கண்டால் வியக்கவே செய்வார்கள். போக்கிரி என்பவனை மகா நீசமானவனென்று நாம் கருதுகிறோம். ஆனால் அவனிடத்திலும் நல்ல குணங்கள் உண்டு."

அந்த நண்பருக்குச் சந்தேகம் தீரவில்லை. "ஆனால் போக்கிரி, விஷயத்தைச் சொன்னால் அறிந்து கொள்வதில்லையே" என்று கூறினார்.

அதன்மேல் காந்தியடிகள் கூறியதாவது :—

"ஆனால் போக்கிரிக்கு வீரத்தை அறிந்து கொள்ள முடியும். நீங்கள் அவனைவிட அதிக வீரமுள்ளவர்களாக இருப்பதாக அவன் கண்டால் அவன் உங்களுக்கு மரியாதை செலுத்துவான். நான் இது வரை நீங்கள் ஆயுதங்கள் உபயோகிப்பதை விட்டுவிட வேண்டுமென்று உங்களிடம் கேட்டுக் கொள்ளவில்லை. ஆனால் நான் உங்களுக்கு ஆயுதங்கள் கொடுக்க முடியாது. நீங்கள் சிட்டகாங் ஆயுத சாலையைக் கொள்ளை யடிக்கப் போனவர்கள். உங்களுக்கு நான் ஆயுதங்கள் கொடுக்க முடியுமா? ஆயுதசாலைக் கொள்ளை சம்பந்தமானவர்களிடம் காணப்படும் பெரிய குறை யாதெனில் அவர்கள் தங்களைப் போன்ற வீரர்களின் தொகையைப் பெருக்கிக் கொள்ள முடியாமலிருப்பதுதான். அவர்களைப் பார்த்து மற்றவர்கள் வீரம் கொள்ளக் கூடிய விதத்தில் அமைய வில்லை அவர்களுடைய வீரம்."

அதன் பின் சிட்டகாங் ஆயுத சாலைக் கொள்ளையைப் பற்றி பேச்சு நிகழ்ந்தது.

அவர்களில் ஒருவர் "ஆம் எங்களைப் போல இன்னும் பல வீரர்கள் உண்டாகவில்லை என்பது வாஸ்தவந்தான். எங்கள் செய்கையைக் கண்டித்தால் எப்படி உண்டாக முடியும்?" என்று கேட்டார்.

காந்தியடிகள் :—

"யார் கண்டித்தார்கள்? நான் கண்டித்திருக்கலாம். ஆனால் அது வேறு விஷயம்."

நண்பர் :—

"ஜனங்கள் கண்டித்தார்கள். நானும் அந்தக் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவன்."

காந்தியடிகள :—

"ஜனங்கள் கண்டிக்கவில்லை. நீர் கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்தவரில்லை. சேர்ந்தவராயிருந்தால் இந்த விஷயங்களைச் சொல்ல இங்கே வந்திருக்க முடியாது. இங்கே அட்டூழியங்கள் நடந்தபொழுது அந்தக்

கொள்ளைக் கூட்டத்தாரில் பலர் சும்மா பார்த்துக் கொண்டு உயிரோடிருந்தார்கள் என்பது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகின்றது. கொள்ளையடிக்கப் போனபொழுது எத்தகைய அஞ்சாமையையும் மனோ தைரியத்தையும் காட்டினார்களோ அத்தகைய அஞ்சாமையையும் மனோதைரியத்தையும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையில் காட்டியிருந்தால் அவர்கள் உண்மையான வீரர்கள் என்று சரித்திரத்தில் இடம் பெற்றிருப்பார்கள். அப்படிச் செய்யாததால் சரித்திரதேவதை அவர்களுடைய பெயர்களை ஒரு சிறு குறிப்பிலேயே எழுதி வைப்பாள். நீங்கள் ஆயுத உபயோகத்தை மறந்துவிடவேண்டுமென்றோ என்னுடைய வீர நெறியைப் பின்பற்ற வேண்டுமென்றோ நான் இப்பொழுது உங்களிடம் சொல்லவில்லை. அஹிம்ஸா நெறியை நானே இன்னும் பரிபூர்ணமாக அனுஷ்டித்தாகவில்லை. அதைக் கிழக்கு வங்காளத்தில் பரிசோதித்துப் பார்ப்பதற்காகவே இங்கே வந்திருக்கிறேன். நீங்கள் சாதாரணமாக வழங்கிவரும் வீரத்தை மேற்கொள்ளும்படியே நான் உங்களுக்குச் சொல்கின்றேன். ஆணும் பெண்ணும் அவமானம் ஏற்பட இருக்கும் சமயத்தில் உயிரைக் கொடுத்தேனும் அதைத் தடுப்பதற்கான மனோதைரியத்தை மேற்கொள்ளும்படி நீங்கள் செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஹிந்துக்கள் கிழக்கு வங்காளத்தில் தங்கி இருக்க முடியும். அத்துடன் முஸல்மான்களும் உடன் பிறந்த சகோதரர்களே யன்றி வேறல்லர்"

நண்பர் :—'இங்கே முஸல்மான்கள் ஹிந்துக்களைவிட ஐந்து மடங்கு அதிகமாக இருக்கிறார்கள். அந்த நிலைமையில் நாங்கள் என்ன செய்யமுடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்"

காந்தியடிகள் :—"இந்தியா பிரிட்டிஷாருக்கு அடிமையானபோது இந்தியர்கள் 33 கோடி. இங்கிலீஷ் போர் வீரர்கள் 70 ஆயிரம்தான்"

நண்பர் :—"ஆனால் அவர்களிடம் ஆயுதங்கள் இருந்தன. எங்களிடம் கிடையாது. சர்க்கார் தங்கள் ஆயுத பலத்தைக் கொண்டு அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறார்கள்.

காந்தியடிகள் :—

"தென் ஆப்பிரிக்காவில் இந்தியருடைய நிலைமை இதைவிட மோசமல்லவா? இந்தியர்கள் மிக மிகச் சிலரே யல்லவா? அத்துடன் ஐரோப்பியர்களிடம் ஆயுதங்கள் இருந்தன எங்களிடம் கிடையாது. அதனால் நாங்கள் சத்தியாக்கிரக ஆயுதத்தைச் சிருஷ்டி செய்தோம். அதன் காரணமாக இன்று இந்தியர்களை அங்கே வெள்ளைக்காரர்கள் மரியாதை செய்கிறார்கள். ஜூலு வகுப்பைச் சேர்ந்தவர்கள் நல்ல திடசரீர முடையவர்கள். அப்படி இருந்தும் ஐரோப்பியர்கள் அவர்களை மதிப்பதில்லை."

அதன்மேல் அந்த நண்பர் இறுதியாக "அப்படியானால் நாங்கள் எந்த வழியையேனும் அனுசரிக்கலாமோ?" என்று கேட்டார். அதற்கு காந்தியடிகள் கூறிய பதில் :—

"எந்த வழியையும் அனுஷ்டிக்க முடியாது. பலாத்காரத்தைக் கையாள்வதானாலும் அதற்கும் ஒரு யுத்த தர்மம் உண்டு. உதாரணமாக கிழவர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் வெட்டுவதென்பது வீரமாகாது. வெறும் கோழைத்தனமே யாகும். அவர்களை உயிரைக் கொடுத்தேனும் காப்பாற்றுவதுதான் வீரமாகும். இஸ்லாம் மதம் ஆரம்பமான காலத்தில் அத்தகைய வீரச் செயல்கள் நிகழ்ந்தன. அதன் காரணமாக இஸ்லாம் மதம் அதிக பலமேயடைந்தது"

**வீரமா? மிருகத்தனமா?**

நண்பர் :—"ஹிந்துக்கள் முஸ்லிம்களைப் போய்த் தாக்க நீங்கள் அனுமதி கொடுப்பீர்களா?"

காந்தியடிகள் :—

பீஹார் ஜனங்கள் முஸ்லிம்களைத் தாக்கித் தங்களுக்கும் இந்தியாவுக்கும் இழிவைத் தேடிவிட்டார்கள். இந்தியாவின் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டைப் போட்டு பின்னால் போகும்படி செய்துவிட்டார்கள். பீஹாரைப் பற்றி பேச எனக்கு உரிமையுண்டு. பீஹாரிலுள்ள சாம்பாரானில் அஹிம்ஸா முறையை நடத்திக் காட்டும்படியான அதிர்ஷ்டம் பெற்றிருந்தேன். அதனால் வங்காளத்திற்கும் எனக்கும் உள்ள சம்பந்தத்தைவிட பீஹாருக்கும் எனக்கு முள்ள சம்பந்தம் அதிக நெருக்கமானதாகும். பீஹாரில் பழிவாங்கியதால் முஸ்லிம்கள் அடங்கிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அப்படியானால் அவர்கள் தற்காலிகமாகத்தான் அடங்கி இருப்பார்கள். ஹிந்துக்கள் பழி வாங்கினால் முஸ்லிம்களும் பழிவாங்க முடியும் என்பதை மறந்து விடுகிறார்கள். பீஹார் நம்முடைய அடிமைச் சங்கிலியில் மற்றுமோர் கண்ணியை சிருஷ்டி செய்துவிட்டது. மறுபடியும் பீகாரில் நடந்ததுபோல் நடக்குமானால் நான் சொல்லப்போவதை உங்கள் தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள் :—

> இந்தியாவானது வெகு சீக்கிரத்தில் மூன்று பெரிய வல்லரசுகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு விடும். அவைகளில் ஒன்று இந்தியாவைக் கண்காணிக்கும் தர்மகர்த்தாவாக ஆகிவிடும். இந்தியாவின் சுதந்திரத்தை இன்று நிர்ணயிக்க வேண்டியவை வங்காளமும் பீஹாரும்தான்.

பிரிட்டிஷ் சர்க்கார் காங்கிரஸிடம் அதிகாரத்தை ஒப்புவித்திருப்பதற்குக் காரணம் அவர்களுக்கு காங்கிரஸிடம் அன்பு ஏற்பட்டுவிட்டதன்று. காங்கிரஸ் அதிகாரத்தை நல்லவிதமாக உபயோகிக்கும், துர்ப்பிரயோகம் செய்யாது என்று அவர்கள் நம்புவதால்தான் காங்கிரஸிடம் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இன்று பண்டித ஜவகர்லால் நேரு தம்முடைய அதிகாரம் போய்விடுமோ என்று எண்ணும்படியான நிலையில் இருக்கிறார். ஆனால் அவர் அப்படி நிகழ விட்டுவிட மாட்டார். அதற்காகத்தான் அவர் பீகாருக்குப் போயிருக்கிறார். அவசியமுள்ளவரையில் அங்கே தங்கி இருக்கப்போவதாக கூறி இருக்கிறார். பீஹார் ஜனங்கள் கோழைகளைப்போல் நடந்திருக்கிறார்கள். ஆயுதங்களை உபயோகிக்க வேண்டியிருந்தால் அவைகளை நல்லவிதமாக உபயோகியுங்கள். தவறான வழியில் உபயோகிக்காதீர்கள். பீஹார் ஜனங்கள் நல்ல வழியில் உபயோகிக்கவில்லை. அவர்கள் பழிவாங்க விரும்பினால் நோவாகாளிக்குப் போய் பிராணத்தியாகம் செய்திருக்கவேண்டும். ஆனால் ஆயிரம் ஹிந்துக்கள் ஒன்று சேர்ந்து தங்களிடையே வாழும் ஒரு சில முஸ்லிம்கள் மீது பாய்ந்து கொல்வதென்பது பழி வாங்குவது ஆகாது. வெறும் மிருகத்தனமேயாகும். ஆயுதங்கள் உபயோகிக்கும் உரிமை பலவீனர்களைக் காப்பாற்றுவதற்கே ஏற்பட்டதாகும். பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் கிழக்கு வங்காளத்திலுள்ள ஹிந்துக்களுக்குச் செய்திருக்கக்கூடிய உயர்ந்த உதவி யாதெனில் தங்களிடையே வசிக்கும் முஸ்லிம்களை தம் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாப்பதேயாகும். அவர்கள் அப்படிச் செய்தால் அதைப் பார்த்து மற்றவர்களும் அப்படியே செய்வார்கள். இப்பொழுதுகூட அவர்கள் இடையிலேற்பட்ட வெறி நீங்கிவிட்டபடியால் அதற்காகப் பச்சாதாபப்பட்டு முஸ்லிம்களைப் பாதுகாக்க முன்வருவார்களென்று நம்புகிறேன். நான் உயிரோடிருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினால் என்னுடைய உயிருக்கு அவர்கள் கொடுக்க வேண்டிய விலை அதுதான்"

இத்துடன் முதற்பாடம் முடிகிறது.

காஜிர்கில் — 17-11-46 — பியாரேலால்

# தமிழ் ஹரிஜன்

டிசம்பர் 1 ஞாயிறு 1946


## மனச் சாட்சிக்கு ஒரு வேண்டுகோள்

காந்தியடிகள் தத்தப்பாராவில் நவம்பர் மாதம் 10-ம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு பேசினார்.

"நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் ஹிந்துக்கள் முசல்மான்கள் இருவர்க்கும் ஊழியன் என்பதை உங்களுக்கு உறுதி சொல்ல விரும்புகிறேன். பாகிஸ்தானுக்கு விரோதமாக போர் செய்வதற்காக நான் இங்கு வரவில்லை. பிரிக்கப்படுவது இந்தியாவின் தலை எழுத்தாக இருக்குமானால் நான் அதைத் தடுத்துவிட முடியாது.

ஆனால் பாகிஸ்தானை பலாத்காரத்தைக் கொண்டு ஸ்தாபித்துவிட முடியாது என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது பாடப்பெற்ற தோத்திரப் பாடலில் கவிஞர் கடவுளை ரசவாதியாகக் கூறுகிறார். இரும்பைத் தங்கமாக்குவதே ரசவாதமென்று கூறப்படும். ஆனால் அது எப்பொழுதும் விரும்பத்தக்க காரியமன்று. உதாரணமாக ரயில் பாதையிலுள்ள தண்டவாளங்களை யெல்லாம் ரசவாதத்தைக் கொண்டு தங்கமாக மாற்றி விட்டால் ரயில் வண்டிகள் அவைகளின் மீது ஓட முடியாமல் போகும். ஆனால் கடவுளுடைய கையானதுபட்டால் ஆத்மா தூய்மை அடைந்துவிடும். அது எப்பொழுதும் விரும்பத்தக்க காரியமாகும்.

அத்தகைய ரசவாதம் எல்லோருடைய இருதயத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. நான் என்னுடைய முஸ்லிம் சகோதரர்களுக்கு கூற விரும்புவதெல்லாம் அவர்கள் ஒரே சமூகமாக இருந்தாலும் இரண்டு சமூகங்களாக இருந்தாலும் அவர்கள் ஹிந்துக்களுடன் நண்பராகவே வாழ வேண்டுமென்பதேயாகும். அவ்விதம் செய்ய விரும்பாவிட்டால் அதை அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். அப்பொழுது நான் தோல்வி அடைந்துவிட்டதாக ஒப்புக் கொள்வேன். ஊரை விட்டு வந்த அகதிகள் எப்பொழுதும் அகதிகளாகவே தங்கி இருக்க முடியாது. சர்க்கார் அவர்களுக்கு எப்பொழுதும் உணவு கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. அவர்கள் இப்பொழுது பெறும் உணவுதான் எத்தகையது! பலம் பொருந்திய உடலுள்ளவர்கள் எவ்வளவு தானியம் தினந்தோறும் பங்கீடாக பெற்றால் உயிருடன் இருக்க முடியுமோ அவ்வளவு தானியத்தில் பாதிக்கும் குறைவாகவே அவர்கள் பெற்று வருகிறார்கள். தானியத்தின் குறைபாட்டைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு மீனோ காய்கறியோ வேறு எதுவுமோ பெறவில்லை. இந்த மாதிரியாக ,எவ்வளவு நாள் அவர்கள் ஜீவித்திருக்க முடியும்? ஆதலால் அவர்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிப் போவதை முஸ்லிம்கள் விரும்பாவிட்டால் அவர்கள் வேறு இடத்துக்குப் போக வேண்டியது தான்.

ஆனால், கிழக்கு வங்காளத்திலுள்ள ஹிந்துக்கள் அனைவரும் போய் விட்டாலும் நான் கிழக்கு வங்காளத்திலுள்ள முஸ்லிம்கள் இடையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பேன். அவர்கள் எனக்குக் கொடுக்கும் உணவில் எதை நான் என்னுடைய தருமப்படி உண்ண முடியுமோ அதை உண்டுகொண்டு வாழ்ந்திருப்பேன். எனக்கு வேண்டிய உணவை கிழக்கு வங்காளத்திற்கு வெளியே உள்ள இடங்களிலிருந்து கொண்டு வரமாட்டேன். எனக்கு மீனும் இறைச்சியும் தேவையில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் கொஞ்சம் பழமும் காய்கறியும் ஆட்டுப்பாலும்தான். ஆட்டுப் பாலும் தானியங்களும் கூட நான் எப்பொழுது சாப்பிடலாமென்று கடவுளுக்குத் திருவுள்ளமாகின்றதோ அப்பொழுது தான் நான் அவைகளை மறுபடியும் உண்பேன். நான் அதை உண்ணுவதை விட்டு விட்டேன். பீகாரில் உள்ள ஹிந்துக்கள் தாங்கள் செய்த தவறான காரியங்களைக் குறித்து உண்மையாகவே பச்சாத்தாபம் கொள்ளும் வரை அவைகளை நான் மறுபடியும் சாப்பிட மாட்டேன்.

ஆயிரம் ஹிந்துக்கள் நூறு முசல்மான்களைச் சூழ்ந்து கொண்டு அவர்களைத் துன்பப்படுத்துவது வீரமாகாது கோழைத்தனமேயாகும். அது போலவே ஆயிரம் முசல்மான்கள் நூறு ஹிந்துக்களை சூழ்ந்துகொண்டு துன்பப்படுத்துவதும் வீரமாகாது, கோழைத்தனமேயாகும். இரு கட்சியாரும் சமமான தொகையினராக இருந்துகொண்டு முன்கூட்டி அறிவித்துவிட்டுப் போர்புரிவதே நியாயமான முறையில் போர்புரிவதாகும். இப்படி நான் கூறுவதைக் கொண்டு போர் புரிவதை நான் சரி என்று கூறுவதாகப் பொருள் கொள்ள வேண்டாம். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நண்பர்களாக ஒன்று சேர்ந்து வசிக்கவும் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைக்கவும் முடியாதென்று சொல்லுகிறார்கள். அதை நான் ஒரு நாளும் நம்ப முடியாது. ஆனால் நீங்கள் அதை நம்பினால் அதை நீங்கள் என்னிடம் சொல்ல வேண்டும். அப்படி நீங்கள் சொன்னால் ஹிந்துக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிச் செல்ல வேண்டுமென்று நான் அவர்களிடம் சொல்ல மாட்டேன். அவர்கள் கிழக்கு வங்காளத்தை விட்டு வெளியேறி விடுவார்கள். அப்படி அவர்கள் போவார்களே யானால் அது ஹிந்துக்கள், முஸ்லிம்கள் இருவர்க்கும் வெட்ககரமான விஷயமாகும். அதற்கு மாறாக நீங்கள் உங்களிடையே ஹிந்துக்களைத் தங்கும்படி சொல்வீர்களானால் நீங்கள் அவர்களிடம் 'உங்களைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் ராணுவத்தை எதிர்பார்க்க வேண்டியதில்லை; உங்களுடைய முஸ்லிம் சகோதரர்களாகிய நாங்கள் காப்பாற்றுகிறோம்' என்று சொல்ல வேண்டும். அவர்களுடைய குமாரிகளும், சகோதரிகளும் தாய்மாரும் உங்களுடைய சொந்தக் குமாரிகளும் சகோதரிகளும் தாய்மாருமே ஆவார்கள். நீங்கள் உங்களுடைய உயிரைக் கொடுத்தேனும் அவர்களைக் காப்பாற்ற வேண்டும். நேற்று அகதிகள் முகாமில் நான் ஒரு பிரசங்கம் செய்தேன். ஜில்லா மாஜிஸ்திரேட் திரு. மெக்கார்னே மனிதர்கள் எல்லோரும் ஆதாம் ஏவாள் இருவருடைய சந்ததிகள் என்றும் அதனால் எல்லோரும் ஜாதி மத வேற்றுமையின்றி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் என்றும் அதனால் அவர்கள் எல்லோரும் உறவினர்கள் போல் ஒன்றாக வாழ வேண்டுமென்றும் அவர்களுக்குச் சொன்னார்.

நேற்று மாலை பிரார்த்தனைக் கூட்டம் முடிந்த பிறகு ஒருவர் தம்முடைய கிராமத்திற்கு திரும்பிப் போயிருப்பதாக கேள்விப்படுகிறேன். அவர் அங்கே போனதும் முஸ்லிம்கள் அவர்களுடைய வீட்டைச் சூழ்ந்துகொண்டு வீட்டிற்குள் போக வொட்டாதபடி தடுத்தார்களாம். அது உண்மையாயிருக்குமானால் அவர்களை நான் தம்முடைய வீடுகளுக்குத் திரும்பிப் போகும்படி எப்படிக் கூற முடியும்? நான் சொன்ன விஷயங்களை நீங்கள் ஆழ்ந்து யோசித்து உங்கள் விருப்பம் எது என்பதை எனக்குச் சொல்லுங்கள். அதன்படியே நான் ஹிந்துக்களுக்கு யோசனை கூறுவேன்.

வீடுகளுக்குத் திரும்பி வருகிற ஹிந்துக்களை சந்தோஷமாக வரவேற்கக் கூடிய நல்ல முஸ்லிம்கள்

பலர் இருப்பதாகவும் ஆனல் அதற்குப்போக்கிரிகளே தடையாக நிற்பதாகவும் கூறுகிருர்கள். அதை நான் நம்புகிறேன். நல்ல முஸ்லிம்கள் ஒன்று போல் தங்கள் விருப்பத்தை வெளியிட்டு அது போலவே நடப்பார்களானல் போக்கிரிகள் என்று சொல்லப் படுபவர்கள் நல்லவர்களாக ஆகிவிடுவார்கள் என்று நான் உங்களுக்குக் கூறவிரும்புகின்றேன்.''

காஜிர்கில் — 16-11-46 — பியாரேலால்

## வாரக்கடிதம்

நோவாகாளி ஜில்லாவில் இப்பொழுது எங்கு சென்ருலும் பச்சைப் பசேல் என்ற வயல்களே காணப்படுகின்றன. இந்த வருஷம் கிடைத்த மாசூலைப்போல சென்ற பன்னிரெண்டு வருஷகாலத்திற்கிடையில் கிடைத்ததில்லை. ஆனல் இயற்கை அன்னை எவ்வளவு அருள் செய்து என்ன? மனிதன் தன்னுடைய அக்கிரமத்தால் அதைப் பாழாக்கிவிட்டான். நெற்பயிர்கள் கதிர்விட்டு முதிரும் தறுவாயில் இருக்கின்றன. ஆனல் அவற்றை அறுப்பதற்கு விதைத்தவர்கள் அங்கு இல்லை. சிலர் கொல்லப்பட்டுப் போனர்கள். மற்றவர்கள் தப்பியோடி அகதி முகாம்களில் தங்கி இருக்கின்றனர்.

அகதிகளை அவர்களுடைய ஊர்களுக்குத்திருப்பி அனுப்பும் பிரச்னை சர்க்காருக்கும் சகாய ஸ்தாபனங்களுக்கும் அதிக கவலையைக்கொடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் தங்களுடைய வீடுகளுக்குச் சீக்கிரமாகத் திரும்பிப் போகாவிட்டால் நெல்லையும் பாக்கையும் இழந்துவிடுவார்கள். அவர்கள் இல்லாத சமயத்தில் மற்றவர்கள் அதை எடுத்துக்கொள்வார்கள். பிரச்னையானது கஷ்டங்கள் நிறைந்ததாக இருக்கிறது. அவர்கள் தங்கள் உடமைகள் அனைத்தையும் இழந்துவிட்டார்கள், அவர்களுக்கு குடியிருக்க வீடில்லை, உண்ண உணவில்லை. இந்த நிலைமையில் எங்கே போவதென்று கேட்கிருர்கள். திரும்பிப் போனல் யார் எங்களுக்குப் பாதுகாப்பென்று கேட்கிருர்கள். அங்குள்ள பிரச்சினைகளில் எல்லாம் பெரிய பிரச்சினையா யிருப்பது பயத்தைப் போக்கி பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்குவதே யாகும்.

### கோபர்பாக் கொடுமை

8-ந் தேதி யன்று காந்தியடிகள் சௌமொஹானியிலிருந்து கோபர்பாக் என்னும் இடத்திற்கு மோட்டார் வண்டியில் போனர். அவருடன் பார்லிமெண்டரி காரியதரிசிகளான ஜனப் நஸ்ருல்லா சாஹிபும், அப்துர் ரஷீத் சாஹிபும் ஜில்லா மாஜிஸ்ரேட் திரு. மெக்கார்னியும், நோவகாளி ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டும் போனர்கள். அந்த கிராமத்தில் தென்னையும், கமுகும் அடர்ந்து வளர்ந்திருந்தன. அவற்றினிடையே ஐந்து தொகுதியாக காணப்பட்ட குடிசைகளில் ஹிந்துக்கள் வசித்து வந்தார்கள். அவர்களைப் போல ஐம்பது மடங்கு முஸ்லிம்களும் அந்த கிராமத்தில் காணப்பட்டார்கள். அந்த வீடுகளில் ஒன்று 'பட்வாரி'ன் வீடு. அழகான வாழை மரங்கள் காணப்பட்டன. எங்கு பார்த்தாலும் இயற்கையின் அழகு அதிகமா யிருந்தது. குளிர்ந்த மெல்லிய காற்று சுகமாக வீசிக் கொண்டிருந்தது.

ஆனல் அங்கே மனிதன் செய்திருந்த அக்கிரமங்களைப் பார்த்ததும் உடம்பில் ரத்தம் ஓடாமல் நின்றுவிடும்போ லிருந்தது. கொலையும் தீ வைப்பதும் நடந்திருந்தன. கோவிலை நாசமாக்கி இருந்தார்கள். கொன்ற பிணங்களை ஒரு வீட்டின் முற்றத்தில் ஒன்றின்மீது ஒன்ருக அடுக்கி எரித்திருந்தார்கள். கரியாய்க் கிடந்த எலும்புகள் சான்றுபகர்ந்துக் கொண்டு சிதறிக் கிடந்தன. சில வீடுகளின் வாசற்படியில் ரத்தக் கறைகள் காணப்பட்டன. அநேக வீடுகளிலுள்ள மண் தரைகளைத் தோண்டி பணமோ நகையோ புதைத்திருக்கிருர்களா என்று தேடிப் பார்த்திருக்கிருர்கள். மரணவாடை இன்னும் மறையாமல் இருந்து கொண்டிருந்தது. எல்லாம் அலங்கோலமாகக் கிடந்தன. மூன்று பெண் குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போயிருந்தார்கள். அவர்களில் இருவர் எங்கு இருக்கிருர்களோ தெரியவில்லை.

### தத்நபாரா

காந்தியடிகள் மாலையில் திரும்பி வந்த பொழுது திவான் பாரி என்னும் கிராமத்தில் சிறிது நேரம் தங்கினர். கோபர் பாக் கிராமத்தில் பட்வாரி குடும்பம் அடியோடு அழிந்து விட்டது. ஆனல் இந்தக் கிராமத்தில் திவான்ஜி குடும்பத்தார் சாமர்த்தியமும் மனோ தைரியமும் உடையவர்களா யிருந்தபடியால் தப்பிப் பிழைத்துக் கொண்டார்கள். அந்தக் கிராமத்தில் அகதி முகாம் அமைக்கப்பட் டிருக்கிறது. 6000 அகதிகள் இருக்கிருர்கள். காந்தியடிகள் அகதிகளை அவர்களுடைய ஊர்களுக்கு அனுப்பும் விஷயத்தைக் குறித்து ஜில்லா அதிகாரிகளுடன் ஆலோசனை செய்தார். அப்பொழுது அந்தப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் லீக் அங்கத்தினர்களில் சிலர், அழைப்பின் பேரில் பிரசன்னமா யிருந்தார்கள்.

காந்தியடிகள் மாலையில் நடந்த கூட்டத்தில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுககும் கீழ்க் கண்டவாறு கூறினர் :—

'' ஹிந்துக்கள் வீடுகளிலிருந்து ஓடும்படி ஏற்பட்டது ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இரண்டு கக்ஷியார்க்கும் அவமானமான காரியமாகும். ஹிந்துக்கள் முஸ்லிம்களுக்குப் பயந்து ஓடியதால் முஸ்லிம்களுக்கு அவமானமாகும். ஒரு மனிதன் இன்னெருவன் நெஞ்சில் பயமுண்டாகும்படி ஏன் செய்ய வேண்டும்?

ஹிந்துக்கள் கோழைத்தனமாக பயந்து போய் ஓடியது ஹிந்துக்களுக்கு அவமானமாகும். மனிதன் கடவுளைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சக்கூடாது என்று நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். என்னுடன் வந்திருக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நீங்கள் உங்கள் வீடுகளுக்குத் திரும்ப வேண்டுமென்றே விரும்புகிருர்கள். ஒரு இடத்தில் ஆயிரக்கணக்கான மக்களைச் சேர்த்து வைத்து உணவும் உடையும் கொடுப்பது உங்களுக்கும் சர்க்காருக்கும் பல விதத்திலும் கஷ்டங்கள் உண்டாக்குகின்றன. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தங்கள் அதிகாரத்திலுள்ள பிரதேசங்களில் இத்தகைய காரியங்கள் நடந்து விட்டதற்காக வெட்கப்படுகிருர்கள். நோவகாளியிலும் திப்பராவிலும் நடந்த காரியங்களை நீங்கள் மறந்து விடவும் மன்னித்து விடவும் வேண்டும். அதனல் நீங்கள் கோழைகளாகி விடவேண்டுமென்று சொல்லி விடவில்லை. எவ்வளவு துக்ககரமா யிருந்த போதிலும், இறந்த காலத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பதால் பிரயோசன மில்லை. இந்தப் பகுதியிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் முன் போலவே நண்பர்களாக ஆகிவிட வேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன். ஹிந்துக்கள் அதிகமான துன்பத்தை அடைந்து விட்டார்கள் என்பதையும் இன்னும் அடைந்து கொண்டு இருக்கிருர்கள் என்பதையும் நான் அறிவேன். ஒரு நல்ல முஸ்லிமும் ஒரு நல்ல ஹிந்துவுமாவது அவர்களுடன் போய் அவர்களைப் பாதுகாப்பதாக உறுதி கூறும் வரை நான் அவர்களை அவர்களுடைய வீடுகளுக்குத் திரும்பிப் போகும்படி கூறமாட்டேன். இத்தகைய உறுதி கூறக் கூடிய ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இந்தப் பகுதியில் ஏராளமாக இருப்பார்களென்றே நம்புகிறேன்.''

கூட்டத்திலிருந்த முஸ்லிம் நண்பர் ஒருவர் '' நாங்கள் அவர்களைப் பாதுகாப்பதாக ஏற்கெனவே உறுதி

ஆன்மசக்தி கண்டுகொண்ட அன்பாளரை அடிமையாக்க யாருமில்லை—நாமக்கல் கவிஞர்

கூறிவிட்டோம். ஆனால் ஹிந்துக்கள்தாம் எங்கள் சொல்லைக் கேட்காதிருக்கிறார்கள்" என்று சொன்னார்.

அதற்கு காந்தியடிகள் "நீங்கள் ஏன் ஹிந்துக்கள் உங்களை நம்பவில்லை என்பதை அறிந்து கொண்டு அவர்களுடைய பயத்தைப் போக்க வேண்டும்" என்று பதில் கூறினார்.

அப்பொழுது ஹிந்து அகதி ஒருவர் எழுந்து "இனிமேலும் முஸ்லிம்களுடைய உறுதி மொழிகளை எப்படி நம்ப முடியும்! கலகம் ஏற்படப்போகும் சமயத்தில் அவர்கள் எங்களைப் பாதுகாப்பதாக உறுதிமொழிகள் கூறினார்கள். ஆனால் பிறகு எங்களைப் பாதுகாக்காமல் விட்டு விட்டார்கள். அதுவும் தவிர, இப்பொழுது நாங்கள் எங்கே போவோம்? எல்லாவற்றையும் இழந்து விட்டோம். திரும்பிப் போய் காட்டில் தங்குவதா? இதற்கு முன் ஐம்பது நல்ல முஸ்லிம்கள் பாதுகாக்கத் தவறி விட்டார்கள். அப்படி இருக்க இப்பொழுது ஒரு நல்ல முஸ்லிம் எப்படி எங்களைக் காக்கப் போகிறார்?" என்று கேட்டார்.

அதற்கு காந்தியடிகள் கூறிய பதில் :—

"சர்க்கார் உங்களுக்குக் குடிசைகளைக் கட்டித் தருவார்கள். நீங்கள் உங்கள் வீடுகளுக்குத் திரும்பிப் போனால் உங்களுக்கு உணவும் உடையும் தருவார்கள். முன்னால் என்ன நேர்ந்திருந்த போதிலும் உங்களை இப்பொழுது பாதுகாப்பதாக ஒரு நல்ல முஸ்லிமும் ஒரு நல்ல ஹிந்துவும் உறுதி கூறினால் அவர்களுடைய சொல்லை நீங்கள் நம்பலாம். இன்னும் நீங்கள் பயந்து கொண்டிருந்தால் நீங்கள் கோழைகள் தான். கோழைகளுக்கு கடவுள் கூட உதவி செய்ய முடியாது."

மறுநாள் காந்தியடிகள் இன்னும் பல கிராமங்களுக்குப் போய் பார்க்கும் பொருட்டு தம்முடைய முகாமை தத்தபாராவிற்கு மாற்றிக் கொண்டார். அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். அவர்களில் 80 சதமானம் உள்ளவர்கள் முஸ்லிம்களேயாவார்கள். அவர்களுடைய மனச் சாட்சியை விழித்தெழும்படி செய்யக் கூடிய ஒரு பிரசங்கத்தை காந்தியடிகள் செய்தார். அவர் கூறியதாவது :—

"கடவுளுடைய நாமம் சாதாரணயான ரசவாதத்தை விட அதிகமான பலம் பொருந்தியதாகும். அது தொட்டதை எல்லாம் பொன்னாகச் செய்வதோடு புனிதமாகவும் செய்யும். நீங்கள் உங்கள் ஹிருதயத்தை நன்றாக ஆராய்ந்து உங்களுடைய விருப்பத்தைச் சொல்லுங்கள். ஹிந்துக்கள் திரும்பி வந்து உங்களிடையே நண்பராக வாழ வேண்டுமென்று நீங்கள் உண்மையிலேயே விரும்புகிறீர்களா? விரும்பினால் நீங்கள் அவர்களைப் பாதுகாக்கவும் அவர்களுடைய பெண்களை உங்களுடைய பெண்களைப் போலவே பாவிக்கவும் உறுதி கூற வேண்டும், உங்களுக்கு விருப்பமில்லையானால் அதையும் என்னிடம் சொல்லி விடுங்கள். நான் துரதிருஷ்டம் வாய்ந்த அகதிகளை வேறு இடங்களில் போய் குடியேறும்படி சொல்லி விடுகிறேன். ஆனால் உங்கள் மனம் மாறும் வரை நான் உங்களிடையே தான் வசித்துக் கொண்டிருப்பேன். நீங்கள் கொடுக்கும் உணவை உண்டு ஜீவிப்பேன். அவசிய மேற்பட்டால் இங்கேயே இறக்கவும் செய்வேன்."

கூட்டத்தின் இறுதியில் அவரிடம் பல கேள்விகள் எழுதிக் கொடுக்கப்பட்டன. அவைகளில் ஒன்று வருமாறு :—

"ஹிந்துக்களைத் துன்புறுத்திய போக்கிரிகள் இன்று கைதியாகாதிருக்கும் பொழுது ஊருக்குத் திரும்பிப் போக அகதிகளுக்கு எப்படி தைரியம் உண்டாகும்?"

அதற்கு காந்தியடிகள் கூறிய பதில் :—

"போக்கிரிகளைக் கைதியாக்குவது சர்க்காருடைய கடமை. அந்தக் கடமையைச்செய்ய அவர்களைவிட்டு விட வேண்டும். நல்ல முஸ்லிம்கள் முழு மனதோடு உங்களைத் திரும்பி வரும்படி அழைத்தால் நீங்கள் திரும்பிப் போகவேண்டும்."

வேறு கிராமங்களுக்கு

11-ம் தேதி காந்தியடிகளுக்கு மௌன தினம். ஆயினும் அன்று அவர் லக்ஷ்மிபூர் பிர்காவிலுள்ள நோவகோலா, ஸோனசாக், கீல்பாரா ஆகிய கிராமங்களுக்குச் சென்றார். மோட்டாரிலும் தோணியிலுமாகப் பிரயாணம் செய்தார். வாய்க்கால்களில் செடி முளைத்து தோணிபோக கஷ்டமாயிருந்தது.

நோவாகோலாவில் 15-வயது மாணவன் உட்பட 8-பேர் கொல்லப்பட்டதாகச் சொன்னார்கள். நான்கு மண்டை ஓடுகளும் கரியாயிருந்த எலும்புகளும் சிதறிக் கிடந்தன. வீடுகளெல்லாம் எரிந்து போயிருந்தன. மாணவன் கொல்லப்பட்ட வீட்டில் அவனுடைய பள்ளிக்கூடத்து புஸ்தகங்களும் அவன் எழுதிய நோட்புஸ்தகங்களும் தரையில் சிதறிக் கிடந்தன. கமுகு மரங்களும், தென்னை மரங்களும் தீப்பட்டு எரிந்து போயிருந்தன. ஓடிப்போகாதிருந்தவர்கள் முஸ்லிம்களாக்கப் பட்டிருந்தார்கள். ஒரு ஊமை தன்னுடைய தலையிலிருந்து களையப்பட்டிருந்த சிகையை ஒரு துணியில் பொதிந்து வைத்திருந்தான். அழுது கொண்டு அதை காந்தியடிகளிடம் காட்டினான். சில பெண்களே அங்கு இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அழுது புலம்பினார்கள்.

ஸோனசக் என்னும் ஊரில் கோவிலை அசுத்தப்படுத்தி எரித்து விட்டார்கள். உடைந்துபோன விக்கிரகங்கள் பாதையில் கிடந்தன, இங்கும் பெண்கள் வந்து காந்தியடிகளிடம் அழுது புலம்பினார்கள்.

காந்தியடிகள் அந்தக் காக்ஷிகளைக் கண்டு அதிகமாக வேதனைப் பட்டார். அந்த வேதனையை அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு எழுதிக் கொடுத்த செய்தியில் நிறைத்திருந்தார். அந்தச் செய்தி கூறியதாவது :—

'நான் போன இடங்களிலெல்லாம் வீடுகள் எரிந்து போயிருந்ததைப் பார்த்தேன். கொள்ளையடிக்கப் பட்டதையும் பலாத்காரமாக மதமாற்றம் செய்யப் பட்டதையும் கேட்டேன். ஹிந்து பெண்கள் நெற்றியில் மங்களகரமான திலகமும், கையில் சங்கு வளையல்களும் இல்லாமல் இருந்தார்கள். முஸ்லிம்கள் எல்லோரும் இந்த அட்டூழியங்களை ஏகமனதாகக் கண்டிக்கவேண்டும். அப்பொழுது தான் ஹிந்துக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிப்போக முடியும். அவர்கள் போவதற்கு முன் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும். புனிதமான குர் ஆன் கட்டளை இடுவதும் அது தான் என்று நம்புகிறேன்."

மறுநாள் மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அகதிகளே அதிகமாக வந்திருந்தார்கள். முதலில் 6-நெம்பர் யூனியன் வைஸ்பிரஸிடெண்ட், மௌல்வி சாகிப் பேசினார். அதன் பின் காந்தியடிகள் பேசினார். அவர் கூறியதாவது :—

"மௌல்வி சாகிப் ஹிந்துக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்பிவர வேண்டுமென்று முஸ்லிம்கள் சார்பாக அழைத்தார். ஆனால் அப்படிச் சொல்வது எளிது செய்வது கஷ்டம். இரண்டு வகுப்பாரும் மறுபடியும் முன் போல் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டுமென்றே எல்லோரும் விரும்புகிறார்கள். அப்படி வாழ்வதற்கு இரண்டு வகுப்பாருடைய மதமும் ஒன்றாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. நான் அட்டூழியங்கள் நடந்திருப்

பதைப் பார்த்து திடுக்கிட்டுப் போனேன். கஷ்டப்பட்டவர்கள் முகத்தில் பயம் குடிகொண்டிருப்பதைக் கண்டேன். பலாத்காரமாக மறுபடியும் மத மாற்றம் செய்வார்களோ என்று பயப்படுகிறார்கள். அந்தப்பயத்தை நீங்கள் விட்டுவிட வேண்டும். கடவுளுடைய நாமத்தை எவன் விட்டுவிட மறுக்கிறானோ அவனே உயிர் வாழத் தகுந்தவன். ராமநாமத்தை விட்டு விடுவதைப் பார்க்கிலும், உயிர்விடக் கற்றுக்கொள்ள வேண்டும். ராணுவத்திடமும் போலிஸிடமும் எனக்கு மோகம் கிடையாது. போலிஸாருடைய வேலை திருடர்களைக் கைதியாக்குவது. ராணுவத்தின் வேலை அயல் நாட்டுப் படை எடுப்பைத் தடுப்பது. ராணுவமும், போலிஸும் உங்களுக்குச் சண்டை போடாமல் இருக்கவோ சமாதானமாக வாழவோ கற்றுக்கொடுக்க முடியாது. நீங்கள் திரும்பிப் போவதற்காக ஒரு திட்டம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் முஸ்லிம் லீக் பரிபூர்ணமாக ஒத்துழைத்து சமாதானத்தை ஏற்படுத்த விரும்பினாலொழிய அந்தத் திட்டம் வெற்றிபெற மாட்டாது. பிரதம மந்திரி ஷம்சுதீன் சாகிப் இரண்டு மூன்று நாட்களில் வருகிறார். லீக் சர்க்கார் செய்ய விரும்புவது யாது என்பதைப் பற்றி அவர் உங்களுக்கு சொல்வார்.''

கோமதாலி, நந்தி கிராமம் ஆகிய கிராமங்களுக்குப் போனதோடு காந்தியடிகள் லக்ஷமிபூர் பிர்க்காவில் செய்த சுற்றுப் பிரயாணம் முடிவடைந்தது. நோவகோலாவிலும் கீல்பாராவிலும் கண்ட காக்ஷிகளே நந்தி கிராமத்திலும் காணப்பட்டன. 600-வீடுகள் எரிந்து போயிருந்தன. கூரை போட்டிருந்த துத்தநாகத் தகடுகள் வளைந்து போயிருந்தன. பள்ளிக்கூடமும், ஆஸ்பத்திரியும் சாம்பலாக்கப் பட்டிருந்தன. தென்னைகளும், கமுகுகளும் எரிந்துபோயிருந்தன. கோயிலை நாசமாக்கி யிருந்தார்கள்.

### துன்பகரமான விநோதம்

காந்தியடிகள் 14-ந்தேதி மாலை தம்முடைய முகாமை தத்த பாராவிலிருந்து காஜிர் கீலுக்கு மாற்றினார். போகும் வழியில் ஷாபூரில் தங்கினார் அங்கு ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பெரிய கூட்டம் கூடுமென்று சொல்லி யிருந்தார்கள். ஆனால் அவருடன் போலிஸாரும் ஜில்லா மாஜிஸ்ரேட்டும் வந்து கைதி செய்யப் போவதாக யாரோ வதந்தியைக் கிளப்பிவிட்டார்கள். அதனால் காந்தியடிகள் அங்கே போன போது கூட்டத்தில் வெகு சிலரே காணப்பட்டார்கள். காந்தியடிகள் கூறியதாவது :—

'' இதுவும் ஒரு விநோதமா ? நான் போலிஸாரையும் ஜில்லா அதிகாரிகளையும் என்னுடன் வரும்படி சொல்ல வில்லை. ஆனால் அவர்கள் தான், நான் பாதுகாப்பில்லாமல் போகக் கூடாது என்று சொல்லி என்னுடன் வருகிறார்கள். அநேக இடங்களில் சமாதானம் ஏற்படுத்த வேண்டுமென்று முஸ்லிம் லீக் தலைவர்கள் உறுதிமொழி கொடுக்கச் சொன்னால் தான் உறுதி மொழி கொடுக்க முடியுமென்று சொல்வதாகவும் நான் கேள்விப்படுகிறேன். அது நியாயந்தான். இன்று காலை காயிதே ஆஜாம் ஜின்னா சாகிப்பினுடைய அறிக்கையை படித்தேன். அதில் கூறியிருக்கும் விஷயங்களை எல்லாம் நான் ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால் எல்லோரும் ஒப்புக்கொள்ளக் கூடிய சில விஷயங்கள் அதில் காணப்படுகின்றன. அந்த அறிக்கையில் ஜின்னா சாகிப் கூறுவதாவது :—

'' முஸ்லிம்கள் நிதானம் இழந்து பழிவாங்கப் புறப்பட்டால் சன் மார்க்கத்திற்கும் தங்கள் உயர்ந்த இஸ்லாம் மதத்தின் போதனைகளுக்கும் விரோதமாக நடந்து கொண்டவராவார்கள். அப்படி நடந்தால் நீங்கள் பாகிஸ்தானை வேண்டு மென்று கேட்கும் உரிமையை இழந்து விடுவீர்கள். அத்துடன் கொலையும் கொடூரமும் மாறிமாறி நடந்துகொண்டே இருக்கும். சுதந்திரம் அடையும் நாள் விலகிப்போகும். அடிமைத் தனமே நீடித்து நிற்கும். நாம் வீரர்கள் தயாள சிந்தை யுடையவர்கள் நம்பத் தகுந்தவர்கள் என்றும் பாகிஸ்தானில் மைனாரிட்டி வகுப்பார்கள் முஸ்லிம் களுக்கு எவ்வளவு பாது காப்புக் கிடைக்குமோ அதை விட அதிகமாகக்கூட பாதுகாப்பு பெறுவார்கள் என்றும் நிரூபித்துக் காட்டவேண்டும்.''

இந்த அறிக்கையை நீங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். கொலை, கொள்ளை, தீவைத்தல் கடத்திச் செல்லல் பலாத்காரமாக மதமாற்றம் செய்தல் முதலியவை இந்தியாவின் அடிமைத் தனத்தை நீடிக்கவே செய்யும். நீங்கள் ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக் கொண்டும் போலிஸ் உதவியையும் நாடிக்கொண்டு மிருந்தால் உங்களை ஆள்வதற்கு மூன்றாவது மனிதனுக்கு இடம் கொடுத்தவர்கள் ஆவீர்கள்.

### மனோ வேதனை

காஜிர்கில் என்னும் கிராமத்தில் காந்தியடிகளுடைய முகாம் அறைகுறையாக நாசம் செய்யப்பட்டிருந்த ஒரு வீட்டில் அமைக்கப்பட்டது. அக்கிரமிகளால் அந்த வீட்டை முழுவதும் எரித்துவிட முடிய வில்லை. சத்திஷ் பாபுவின் தொண்டர்கள் முன் கூட்டிப் போய் அதை சுத்தம் செய்து தங்குவதற்கு ஏற்றதாகச் செய்திருந்தார்கள். அந்த வீட்டின் முற்றத்தில் ஒரு சிறு பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் காந்தியடிகள் கூறியதாவது :—

சுற்றியுள்ள இயற்கைக் காக்ஷியில் அமைதியையும் சாந்தியையும் காண்கின்றேன். ஆனால் அவற்றை ஆண்களுடைய முகத்திலும் பெண்களுடைய முகத்திலும் காண வில்லை. இத்தனை துன்பங்களும் அனுபவித்தபிறகு எப்படி அவற்றை அவர்களுடைய முகத்தில் காண முடியும் ? என்னையும் என்பரிவாரத்தையும் பாது காப்பதற்காக காவலாளிகள் காத்துக் கொண்டு நிற்கிறார்கள். ஆனால் அவர்கள் என்னை யாரிடமிருந்து காப்பாற்றப் போகிறார்கள் ? எனக்கு காவலாளியைக் கூட்டிக் கொண்டு நான் இதுவரை போன தில்லை. இதற்கு முன்னால் பாது காவல் இல்லாமலே தான் வங்காளத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தேன். ஆனால் இன்று அதிகாரிகள் அப்படிச் செய்யச் சம்மதிக்கவில்லை. அது எனக்கு வருத்தமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது. அது கிழக்கு வங்காளத்திலுள்ள முஸ்லிம்கள் என்னை விட அதிகமாக வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

பள்ளிக்கூடங்களும் கோவில்களும்கூட நாசமாக்கப் பட்டிருக்கின்றன. இதை உங்கள் பிரதம மந்திரி ஷம்சுதீன் சாயபு விரும்பவில்லை. கிழக்கு வங்காளத்தில் நடந்த சம்பவங்கள் தமக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுப்பதாக கூறுகிறார். ஜனங்களுடைய மனத்திலிருந்து துவேஷ உணர்ச்சியை ஒழிக்கவேண்டும். அதற்கு முஸ்லிம்களுடைய உதவியும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

### சகோதரக் கொலை

இந்த சகோதரக் கொலை என்னுடைய மனத்தை அதிகமாக வேதனைப் படுத்துகின்றது. நான் 20 வருஷகாலமாக தென் ஆப்பிரிக்காவிலும் 30 வருஷ காலமாக இந்தியாவிலும் கடுமையான போராட்டம் நடத்தி இருக்கிறேன். ஆனால் இந்தக் கொலையானது என்னைத் திக்கு முக்காடச் செய்துவிட்டது. இரண்டு சமூகங்களையும் மறுபடியும் ஒற்றுமையாகவும் சமாதான மாகவும் வாழும்படி செய்வது எப்படி என்பது எனக்கு விளங்கவில்லை. இந்தப் பிரச்சனைக்கு ஒரு

முடிவு காண்பதற்காகவே நான் வங்காளத்திற்கு வந்திருக்கிறேன். வங்காளம் ஒரு பெரிய மாகாணம். சமூகப் பிரச்சினையை இந்த மாகாணத்தில் தீர்த்து விட்டால் மற்ற மாகாணங்களில் எளிதாகத் தீர்த்து விட முடியும். இங்கே நான் வெற்றி பெற்றால் இன்னும் பல வருஷங்கள் உயிருடன் இருக்கக் கூடியவனாவேன். இல்லையானால் என்னை இந்த உலகத்திலிருந்து அழைத்துக் கொள்ளும்படி கடவுளிடம் வேண்டிக் கொள்வேன். நான் வங்காளத்திலிருந்து வெறும் கையோடு போக விரும்ப வில்லை. "நன்மை பிறக்காது" என்ற சொற்றொடர் என்னுடைய அகராதியில் கிடையாது.

வங்காளத்தில் முஸ்லிம்கள் ஹிந்துக்களை வெட்டித் தள்ளினார்கள். அதைவிடக் கேவலமான காரியங்களையும் செய்தார்கள். பீகாரிலுள்ள ஹிந்துக்களும் அதேமாதிரி நடந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு இனத்தாரும் அக்கிரமமாக நடந்து கொண்டிருப்பதால் இருவர் செயல்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பதிலும் ஒருவரை விட ஒருவர் அதிகமாக அக்கிரமம் செய்தார் என்பதிலும் யார் முதலில் செய்ய ஆரம்பித்தார்கள் என்று ஆராய்வதிலும் பிரயோசனமில்லை. நீங்கள் பழிவாங்க விரும்பினால் அந்த வித்தையை என்னிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். நானும் பழிவாங்குவதுண்டு. ஆனால் என்னுடைய முறை வேறு விதமானதாகும். நான் சிறுவனாயிருந்த பொழுது ஒரு குஜராத்தி பாடல் படித்தேன். அது கீழ்க்கண்டவாறு கூறிற்று :—

"ஒரு கிளாஸ் ஜலம் கொடுத்தவருக்கு இரண்டு கிளாஸ் ஜலம் கொடுத்து விடுவதால் எவ்விதப் புண்ணியமும் உண்டாகிவிட மாட்டாது. தீமை செய்தவர்க்கு நன்மை செய்வதே உண்மையான புண்ணியமாகும்" இது தான் உன்னதமான பழி வாங்கும் முறையாகும். நான் ஆதி காலிப்களில் ஒருவருடைய கதையைப் படித்திருக்கிறேன். ஒருவன் அவரை வாளால் வெட்ட வந்தான். அவர் அவன் கையிலிருந்து வாளைப் பிடுங்கிக்கொண்டு அவனை வெட்டப் போனார். அப்பொழுது அவன் அவருடைய முகத்தில் காறி உமிழ்ந்தான். அதன் மேல் காலிப் அவனை வெட்டாமல் விட்டுவிட்டார். இதைக்கண்டதும் வெட்ட வந்தவன் இஸ்லாம் மதத்தில் சேர்ந்து கொண்டான். பலாத்காரமாக இஸ்லாம் மதத்தில் சேர்க்கப்படுகிறவன் அந்த நிமிஷத்திலேயே மனிதத்தன்மையை இழந்து விடுகிறான். பயத்தின் காரணமாக "கல்மா" ஓதுவதில் அர்த்தம் கிடையாது.

ஆத்ம பரிசோதனை

15-ம் தேதி பிரார்த்தனைக் கூட்டம் ராம்கஞ்சில் பள்ளிக்கூடத்தின் முன்னுள்ள மைதானத்தில நடைபெற்றது. பிரார்த்தனை முடிந்தபின் காந்தியடிகள் முதல் நாள் செய்த வேண்டுகோளை மறுபடியும் சொல்லி வற்புறுத்தினார். அவர் கூறியதாவது :—

"தினந்தோறும் நான் என்னுடைய துக்கத்தையும் வருத்தத்தையும் சொல்லுவதைத் தவிர வேறு எதைச் சொல்ல முடியும். நான் போகுமிடங்களிலெல்லாம் நாசம் செய்யப்பட்டிருக்கும் பயங்கரமான காட்சிகளையே காண்கின்றேன். ஆனால் என்னுடைய கண்களில் நீர் பெருகவில்லை. கண்ணீர் விடுகிறவன் பிறர் கண்ணீரைத் துடைக்க முடியாது. என்னுடைய கண்கள் அழவில்லையே தவிர என்னுடைய ஹிருதயம் அழுது கொண்டுதான் இருக்கிறது. முஸல்மான்களுடன் மனம் விட்டுப் பேசி அவர்களை தாங்கள் செய்த அட்டூழியங்களுக்குப் பச்சாதாபப்படும்படி செய்யவும் ஹிந்துக்களை தங்களுடைய வீடுகளை விட்டு போகாமல் இருக்கும்படி வேண்டிக் கொள்ளவும் முடியுமென்ற நம்பிக்கையுடன் நான் வங்காளத்துக்கு வந்தேன். முஸ்லிம்கள் உண்மையாகவே பச்சாதாபப்படுவார்களானால் ஹிந்துக்கள் அவர்களுடைய அந்தரங்க சுத்தியை உணர்ந்து கொண்டு இழந்த நம்பிக்கையைத் திரும்ப பெற்று விடுவார்கள். ஆனால் கிழக்கு வங்காளத்திலிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் பரஸ்பரம் பகைமை உணர்ச்சியோடு இருப்பதையே காண்கிறேன். அதற்குரிய காரணங்களைப்பற்றி இப்பொழுது பேச விரும்பவில்லை. ஆனால் நான் அறிந்த வரையில் கிழக்கு வங்காளத்தில் முஸ்லிம்கள்தான் அக்கிரமங்கள் செய்ய ஆரம்பித்தவர்கள் என்பதை நான் சொல்லவேண்டியவனாயிருக்கிறேன். ஹிந்துக்கள் முஸ்லிம்களைக் கண்டு நடுங்குகிறார்கள். சௌமுகானியில் ஹிந்துக்களைவிட முஸ்லிம்களே அதிகமாக என்னுடைய கூட்டங்களுக்கு வந்தார்கள். ஆனால் தத்தபாராவில் நடந்த முதல் கூட்டத்திற்குப் பிறகு முஸல்மான்கள் என்னுடைய கூட்டங்களுக்கு வராதிருப்பதின் காரணம் எனக்குத் தெரியவில்லை. அது எனக்கு வருத்தத்தைத் தருகிறது. இந்தக் கூட்டத்திற்கு சில முஸ்லிம்களே வந்திருக்கிறீர்கள். நீங்கள் போய் நான் கூறும் விஷயத்தை மற்றவர்களுக்குக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பகுதியிலுள்ள முஸ்லிம் தலைவர்களை சந்தித்துப் பேசுவதற்காகப் போய்க்கொண்டிருந்த ஒரு முஸ்லிம் சகோதரி, காந்தியடிகளின் கூட்டங்களுக்குப் போவதற்கும், ஹிந்துக்களோடு சேர்ந்து வாழ்வதற்கும் முஸ்லிம்லீக் தலைவர்களுடைய உத்தரவு வேண்டுமென்று முஸ்லிம்கள் தம்மிடம் கூறியதாக என்னிடம் சொன்னார். ஹிந்துக்கள் ஊரை விட்டு வெளியேறுவது இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. முஸல்மான்கள் ஹிந்துக்களிடம் "நாம் எல்லோரும் நண்பர்கள், சகோதரர்கள், ஒரே பூமியில் பிறந்தவர்கள் ஒரே காற்றை சுவாசிப்பவர்கள், ஒரே ஜலத்தைக் குடிப்பவர்கள் அதனால் ஹிந்துகள் எங்களைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை" என்று கூறுவார்களானால் ஹிந்துக்கள் வெளியேறுவது நின்று விடும். வெளியேறிய ஹிந்துக்களும் திரும்பி வந்து விடுவார்கள். மிருகங்கள் கூட அன்பு செய்கிறவர்களிடம் அன்பு செய்கின்றன. ஆனால் மனிதன் கடவுள் அம்சம் பொருந்தியவன். அதை உண்மை என்று காட்டத் தீமை செய்தவருக்கு நன்மை செய்யக் கடமைப் பட்டவன் ஆவான். குற்றம் யாருடையதாயிருந்தபோதிலும் இந்த உண்மை இரண்டு கக்ஷியாருக்கும் பொருந்தும். முஸ்லிம்கள், முஸ்லிம் லீகிடமிருந்து உத்தரவு வரவேண்டுமென்று கூறுகிறார்கள். அது எனக்கு அர்த்தமாகிறது. இந்த மாகாணத்தில் லீக் சர்க்கார் நடைபெறுகிறது. ஆனால் அந்த சர்க்கார் லீகில் சம்பந்தப் படாதவர்களுக்கு விரோதமானதென்று சொல்ல முடியாது.

நான் நேற்று காய்தே ஆஜாம் ஜின்னா சாகிபின் செய்தியையும் உங்களுக்குக் கூறினேன், நீங்கள் ஆத்ம சோதனை செய்து பாருங்கள். அவர் கூறுகிறபடி நடந்திருக்கிறோமா என்று நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். இஸ்லாம் மதமானது பலாத்காரமாக மத மாற்றம் செய்வதையும் பெண்களுக்கு மானபங்கம் உண்டாக்குவதையும் அங்கீகரிக்கவில்லை. இஸ்லாம் மதத்தை ஒப்புக் கொள்ளாமல் "கல்மா" ஓதுவதால் மட்டும் என்ன நன்மை உண்டாக முடியும்? ஆதலால் ஹிந்துக்களுடன் நண்பர்களா இருப்பதா, அல்லது பகைவர்களாக இருப்பதா என்று நீங்கள் உங்கள் தலைவர்களிடம் கேட்டு என்னிடம் சொல்லுங்கள். நீங்கள் பகைவர்களாக இருக்க விரும்பினால் நான் ஹிந்துக்களை கிழக்கு வங்காளத்திலிருந்து வெளியேறி விடும்படியாகச் சொல்வேன். ஆனால் நானே இரண்டு கக்ஷியார்களிடையிலும் சமரசமும் சமாதானமும் ஏற்படும் வரை கிழக்கு வங்காளத்தில் தங்கி இருப்பதற்காகவே வந்திருக்கிறேன்."

நாஜிர்கில், — 17-11-46 — பியாரேலால்.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை